113

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (நாடகமும் அரங்கியலும் மற்றும் இயற்கை விஞ்ஞானம்)- 2023/2024

இறுதிப்பரீட்சை மட்டம் - 05

**STU5314–கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 17.12.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் அத்துடன் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. உளவியல் ஆலோசனையினை சுருக்கமாக விளக்கி, பாடசாலை சூழலில் அது தேவைப்படும் சந்தர்ப்பத்திற்கான உதாரணத்தையும் தருக.

2. பாடசாலைக்கு செல்லும் மாணவர் பொருத்தப்பாட்டில் தோல்வியடைந்தால் எப்படி ஒரு சமூகப்பிரச்சினையாக மாறுகின்றது என்பதை **இரண்டு (02)** காரணங்களின் துணையுடன் விளக்குக.

3. பாடசாலை ஆலோசகர் மூலம் பெற்றோருக்கு அறிவிக்கப்பட வேண்டிய பிள்ளைகள் தொடர்புடைய **மூன்று (03)** அம்சங்களைக் குறிப்பிடுக.

4. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் நடத்தையை ஆய்வு செய்வதற்கு மிகவும் பொருத்தமான சோதனை அல்லது ஆலோசனை நுட்பத்தினை நியாயம் ஒன்றின் மூலம் பரிந்துரைக்குக.

5. இலங்கையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆலோசனை சேவை வழங்கும் பாடசாலை தவிர்ந்த நிறுவனமொன்றின் பெயரைக் குறிப்பிட்டு, இந்நிறுவனம் வழங்கும் **இரண்டு (02)** சேவைகளைக் குறிப்பிடுக.

6. தொழில் தேர்வு பாடங்களுக்கு தயாராக இருக்க ஆரம்ப வகுப்பு மாணவர்களிடம் விருத்தி செய்யப்பட வேண்டிய **ஐந்து (05)** திறன்களைக் குறிப்பிடுக.

7. பிள்ளையின் சமூக விரோத நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் பாடசாலை தொடர்பான **இரண்டு (02)** காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக.

8. கற்றல் குறைபாடுள்ள பிள்ளைகளுக்கு உதவுவதற்கு ஒரு ஆசிரியர் பின்பற்றக் கூடிய **மூன்று (03)** உத்திகளை விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. "பாடசாலை மாணவர்களின் பொருத்தப்பாடான ஆளுமை வளர்ச்சிக்கு உதவும் ஒரு முக்கிய முகவராகும்" மாணவர்களின் பொருத்தப்பாடான ஆளுமை வளர்ச்சியைத் தடுக்கும் **இரண்டு (02)** பாடசாலை தொடர்பான காரணிகளை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**சம்பவக் கற்கை**

கசுன் 12ஆம் வகுப்பு மாணவன். வெளிச்செல்லும் மற்றும் தன்னம்பிக்கையான ஆளுமைக்கு எப்போதும் பெயர் பெற்றவர். இருப்பினும், சமீபத்தில், அவரது ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் அவரது நடத்தையில் ஒரு மாற்றத்தை கவனித்தனர். அவர் கல்வியில் பின்னடைவுகளை சந்தித்தார். பாடசாலை நடவடிக்கைகளில் ஈடுபாடு குறைவாக காணப்பட்டது. மேலும் அவரது புள்ளிகள் குறையத் தொடங்கியுள்ளன. கசுனின் பெற்றோர் சமீபத்தில் பிரிந்தனர், மேலும் அவர் தனது தந்தையுடன் வாழ்ந்து வருகிறார். கசுன் மனச்சிக்கலுக்குள்ளான பல பிரச்சினைகளுக்கு மத்தியில் உணர்ச்சி ரீதியாக விலகி தனது சொந்த பிரச்சினைகளில் ஈடுபட்டுள்ளார். கசுன் தற்போது வீட்டை நிர்வகிப்பதற்கும், தனது இளைய சகோதரர்களை கவனித்துக்கொள்வதற்கும் முயற்சி செய்வதன் சுமையை உணர்கின்றான், அதே நேரத்தில் தனது சொந்த உணர்ச்சிகரமான துயரத்தையும் சமாளிக்கிறான். அவர் நேசித்த விடயங்களில் அவர் இனி மகிழ்ச்சியைக் காணவில்லை, மேலும் ஒரு காலத்தில் அவரது சமூக தொடர்புள் பலவீனமடையத் தொடங்கியுள்ளன.

**ii.** மேற்கூறிய சம்பவக்கற்கையின் படி கசுனின் நடத்தை மாற்றத்தில் செல்வாக்கு செலுத்தக் கூடிய **இரண்டு (02)** வகையான காரணிகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** கசுனிடம் நன்கு பொருத்தப்பாடுடைய ஆளுமையை விருத்தி செய்ய ஒரு ஆசிரியராக நீர் பயன்படுத்தக்கூடிய **மூன்று (03)** உத்திகளை கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**10. i.** உலகில் பல நாடுகளின் பாடசாலை ஆலோசனை சேவையின் **மூன்று (03)** வகையான அமைப்பினைக் குறிப்பிட்டு, அவ்வமைப்பில் **ஒன்றின் (01)** தன்மையினைச் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவையின் பன்முகப்படுத்தப்படல் (Decentralization) மாணவர்களுக்கான ஆலோசனையின் தரத்தினைப் பாதிக்கும் என்று நினைக்கின்றீர்களா? உங்கள் விடையினை **மூன்று (03)** காரணங்களுடன் நியாயப்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவையின் அவசியத்திற்கான **நான்கு (04)** காரணங்களைக் கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

**11. i.** தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையின் **ஐந்து (05)** நோக்கங்களைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**ii. (a)** எலில் ஜின்ஸ் பேர்க் (Eli Ginzberg) இன் தொழிற்கல்வி தெரிவு கோட்பாட்டின்படி ஒரு தனிநபரின் தொழில் வளர்ச்சியின் **மூன்று (03)** கட்டங்களைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**(b)** தொழில் விருத்திச் செயற்பாட்டில் ஒவ்வொரு கட்டத்தின் முக்கியத்தவத்தினையும் விளக்குக.

**(03 புள்ளிகள்)**

**iii.** எலில் **ஜின்ஸ் பேர்க் (Eli Ginzberg)** இன் தொழிற்கல்வி தேர்வுக் கோட்பாடு மற்றும் **டொனால்ட் சூப்பர்** இன் (Donald Super) தொழில் விருத்தி கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துக்களுக்கிடையே உள்ள வேறுபாட்டினை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**12. i.** **கார்ல் ரோஜஸ்** இன் "ஆள்மையக் கோட்பாட்டிற்கும்", **சிக்மன் பிரைட்** இன் "உளப்பகுப்பு கோட்பாட்டிற்கும்" இடையிலான **மூன்று (03)** வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ii.** **கார்ல் ரோஜஸ்** இன் ஆலோசனை செயல்முறையில் வினைத்திறனை பாதிக்கும் **நான்கு (04)** முக்கிய காரணிகளைக் கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

**iii.** மாணவர்களிடம் நேர்ப்பாங்கான சுய எண்ணக்கருவினை உருவாக்க நாடகம் அரங்கியல் / விஞ்ஞான பாட ஆசிரியராக நீங்கள் பயன்படுத்தக் கூடிய **இரண்டு (02)** உத்திகளை ஆராய்க.

**(06 புள்ளிகள்)**

**13. i.** **நான்கு (04)** வகையான உடல் சார் குறைபாடுகளைக் குறிப்பிட்டு, அதில் ஒரு வகையைச் சேர்ந்த மாணவர்களின் பண்புகளைக் குறிப்பிடவும்.

**(08 புள்ளிகள்)**

**ii.** மீத்திறனுடைய மாணவர்களின் கல்வி அடைவினை மேம்படுத்துவதற்கு **மூன்று (03)** உதவிசார் செயன்முறைகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** மேற்குறிப்பிட்ட மாணவர்களுக்கு உங்கள் பாடத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் எவ்வாறு உதவலாம் என்பதனை **மூன்று (03)** உதாரணங்களுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -